பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

23 06 2025 **MONDAY** 12 40 **PM** ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- வர்த்தக துறையில் மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகள் காரணமாக, நாடு புதிய பாதையில் வளர்ச்சி கண்டு வருவதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

- 25வது மத்திய மண்டல கவுன்சில் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று மாலை உத்தரபிரதேச மாநிலம், வாரணாசி செல்கிறார்.

- விடுதலைப் போராட்ட வீரர் டாக்டர் **Syama Prasad Mookerjee** நினைவு தினத்தை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் புகழாரம் சூட்டியுள்ளனர்.

- இஸ்ரேல் - ஈரான் இடையே போர் நீடித்து வரும் நிலையில், இருதரப்பிலிருந்தும் ஏவுகணை தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

- 17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Aditya Dileep Jadhav** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<<>>>>>>>**

வர்த்தக துறையில் மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகள் காரணமாக, நாடு புதிய பாதையில் வளர்ச்சி கண்டு வருவதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளப் பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர், ஏற்றுமதியில் இந்தியா சாதனை படைத்துள்ளதாகவும், பல நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட தாராள வர்த்தக ஒப்பந்தங்கள் நல்ல பலனை அளித்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வர்த்தகத்தை மின்னணு கட்டமைப்பில் கொண்டு வந்திருப்பதன் மூலம், அரசின் சேவைகள் வெளிப்படையாகவும், விரைவாகவும் கிடைத்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

எதிர்காலத்திற்கான உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களுக்கான முயற்சிகளும் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வர்த்தகத்தையும், முதலீடுகளையும் அதிகரிப்பதற்கு அதிக கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

கடந்த மே மாத இறுதியில் இந்தியாவின் ஏற்றுமதி 71 புள்ளி ஒன்று இரண்டு பில்லியன் டாலராக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டைக்காட்டிலும் 2 புள்ளி ஏழு ஏழு சதவீதம் கூடுதலாகும்.

சீனா, ஆஸ்திரேலியா, ரஷ்யா, அமெரிக்கா, ஜெர்மனி ஆகிய நாடுகளுடன் கடந்த ஓராண்டில் வர்த்தகம் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்திருப்பதாகவும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

<<<<<<<>>>>>>>

25வது மத்திய மண்டல கவுன்சில் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று மாலை உத்தரபிரதேச மாநிலம், வாரணாசி செல்கிறார்.

அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்ய நாத், உத்ராகண்ட் முதலமைச்சர் திரு. புஷ்கர்சிங் தாமி, மத்தியப் பிரதேச முதலமைச்சர் திரு. மோகன் யாதவ், சத்திஷ்கர் முதலமைச்சர் திரு. விஷ்ணுதியோ சாய் ஆகியோர் இந்த மத்திய மண்டல கவுன்சில் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

மத்திய அரசுக்கும் - மாநில அரசுக்கும் இடையிலான ஒத்துழைப்பை ஒருங்கிணைக்கவும் வலுப்படுத்தவும் இந்த கவுன்சில் கூட்டம் நடைபெறுகிறது.

இந்த நான்கு மாநிலங்களிலும் உள்கட்டமைப்பு மேம்பாடு, வளர்ச்சித் திட்டங்கள், சட்டம் ஒழுங்கு உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து விவாதிக்கப்படவுள்ளது.

<<<<<<<>>>>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவின் உரைகள் அடங்கிய இரண்டு நூல்கள் புதுதில்லியில் இன்று வெளியிடப்படுகிறது.

கடந்த 2 ஆண்டுகளில் குடியரசுத்தலைவர் ஆற்றிய 51 உரைகள் **'Wings to Our Hopes'** மற்றும் **'Ashaon Ki Udaan'** என்ற பெயரில் நூலாக தொகுக்கப்பட்டுள்ளது.

தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் வெளியீட்டுப் பிரிவு வெளியிட உள்ள இந்த நூல்களின் இரண்டாம் தொகுதிகளை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வெளியிட உள்ளார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில், தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இணையமைச்சர் டாக்டர். எல். முருகன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

**<<<<<<<>>>>>>>**

நாட்டின் ஒருமைப்பாட்டை காப்பதற்கு டாக்டர் **Syama Prasad Mookerjee** மிகுந்த தைரியத்தோடு முயற்சி மேற்கொண்டார் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

அவரது 72வது நினைவுநாளையொட்டி பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நாட்டை அனைத்து துறைகளிலும் கட்டமைக்க விலைமதிப்பில்லா பங்களிப்பை அவர் வழங்கியுள்ளார் என்றும் அவரது அரும்பணிகளை நாடு என்றென்றும் நினைவுகூரும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**Syama Prasad Mookerjee**–யின் நினைவு நாளையொட்டி, பிஜேபி தலைவர் திரு. ஜெ.பி. நட்டா, புதுதில்லியில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் உள்ள அன்னாரது உருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சுதந்திரப் போராட்ட வீரராகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும் நாட்டிற்காக அரும்பணியாற்றியவர் **Syama Prasad Mookerjee** என்று கூறினார்.

ஜம்மு காஷ்மீருக்கு தனி அந்தஸ்து அளிப்பதால் ஏற்படும் விளைவுகளை அப்பொழுதே உணர்ந்திருந்த அவர், அதனை கடுமையாக எதிர்த்தார் என்றும் திரு. ஜெபி. நட்டா தெரிவித்தார்.

**<<<<<<<>>>>>>>**

கனிஷ்கா குண்டு வீச்சு தாக்குதலின் 40வது ஆண்டு நினைவை ஒட்டி, இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்தோருக்கு வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

1985ஆம் ஆண்டு இதே நாளில் கனடாவிலிருந்து புதுதில்லி வந்து கொண்டிருந்த ஏர் இண்டியா விமானம், அட்லாண்டிக் பெருங்கடல் பகுதியில் தீவிரவாதிகள் குண்டு வீசி தாக்கியதில் 329 பயணிகள் கொல்லப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதல் கனடாவை மையமாக கொண்டு செயல்பட்டு வரும் காலிஸ்தான் தீவிரவாதிகளால் நடத்தப்பட்டது என்றும், இனிவரும் காலங்களில் இதுபோன்ற கோழைத்தனமான தாக்குதலை இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது என்றும் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

இதனிடையே, மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் பூரி, இந்திய குழுவினருடன் இன்று அயலாந்து செல்கிறார்.

கனிஷ்கா குண்டு வீச்சு தாக்குதலில் பலியானவர்களுக்கு அயர்லாந்தில் நடைபெறும் நினைவஞ்சலி கூட்டத்தில் அந்நாட்டு பிரதமர் திரு. மைக்கேல் மார்டின் மற்றும் கனடா அமைச்சருடன் அவர் பங்கேற்கவுள்ளார்.

இந்த குழுவில் பிஜேபி மூத்த தலைவர் திரு. **Tarun Chug** உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

**<<<<<<<>>>>>>>**

நான்கு மாநிலங்களில் காலியாக உள்ள ஐந்து சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்பட்டு வருகின்றன.

குஜராத் மாநிலம் விசாவதார், காதி தொகுதிகளிலும், கேரள மாநிலம் நிலம்பூர், மேற்குவங்க மாநிலம் காலிகஞ்ச், மேற்கு பஞ்சாபில் உள்ள லூதியானா தொகுதிகளிலும் இடைத்தேர்தல் நடைபெற்றது.

**<<<<<<<>>>>>>>**

இஸ்ரேல் – ஈரான் இடையே போர் நீடித்து வரும் நிலையில், இருதரப்பிலிருந்தும் ஏவுகணை தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஈரான் நாட்டை ஆளும் முதன்மைத் தலைவர் **Ayatollah Ali Khamenei** விடுத்துள்ள சமூகவலைதளப் பதிவில், இஸ்ரேலுக்கு பதிலடி கொடுக்கும் நடவடிக்கை தொடரும் என்று கூறியுள்ளார்.

அமெரிக்காவுடன் இணைந்து இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருவதையும் ஈரான் தலைவர் தமது சமூகவலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல், ஈரான் மீது தாக்குதல் நடத்தி பெரிய தவறிழைத்து விட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ஈரானில் உள்ள அணுஆயுதம் மற்றும் அணுஉற்பத்தி கட்டமைப்புகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தினால், அதனை தடுக்க ஈரான் ராணுவம் உறுதியுடன் இருப்பதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், ஈரானில் **Hormuz** ஜலசந்தி வழித்தடத்தை மூடுவதற்கு அந்நாட்டு நாடாளுமன்றம் ஒருமனதாக ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த வழித்தடத்தில் உலகின் பல்வேறு பகுதிகளுக்கு எண்ணெய் மற்றும் எரிவாயு கப்பல்கள் செல்கின்றன.

ஈரானின் மூன்று முக்கிய அணு கட்டமைப்புகள் மீது அமெரிக்கா நடத்தியுள்ள தாக்குதலுக்கு பதிலடியாக இந்த நடவடிக்கையை அந்நாடு மேற்கொண்டுள்ளது.

ஈரானின் இந்த முடிவு பெரிய அளவில் பதற்றத்தை உருவாக்கும் என்று கூறப்படுகிறது.

இருப்பினும், ஈரானின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் இதற்கு ஒப்புதல் அளித்தால் தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, அமெரிக்க ராணுவம் **Hormuz** ஜலசந்தி பகுதியில் அதிக அளவில் படைகளை குவித்துள்ளது.

இந்த ஜலசந்தி மூடப்படுவதை தடுப்பதற்கு பெண்டகனும் தனது கடற்படைகளை தயார் நிலையில் வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலையில், ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Abbas Araghchi** இன்று மாஸ்கோவில் ரஷ்ய அதிபர் திரு.விளாடிமிர் புட்டின் மற்றும் அந்நாட்டின் உயரதிகாரிகளை சந்திக்க திட்டமிட்டுள்ளார்.

ஐ.நா பொதுச்செயலாளர் திரு. அன்டோனியோ குட்டரசும், அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையேயான பதற்றத்தை தணிப்பதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

**<<<<<<<>>>>>>>**

ஈரான், **Hormuz** ஜலசந்தியை மூடுவதாக அறிவித்துள்ள நிலையில், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை கணிசமாக அதிகரித்து வருகிறது.

கடந்த 5 மாதங்களில் **Brent** கச்சா எண்ணெய் விலை 2 சதவீதம் உயர்ந்து, ஒரு பீப்பாய் விலை 79 டாலராக அதிகரித்துள்ளது.

**WTI** கச்சா எண்ணெய் விலையும் 2 சதவீதம் உயர்ந்து 75 டாலராக அதிகரித்துள்ளது.

**<<<<<<<>>>>>>>**

இந்திய பங்குச் சந்தைகள் இன்று காலை சற்று இறங்குமுகமாக காணப்படுகின்றன.

மும்பை பங்குச் சந்தை சென்செக்ஸ் மற்றும் தேசிய பங்குச்சந்தை நிஃப்டி ஆகியவை இன்று நண்பகலில் பூஜ்யம் புள்ளி 7 சதவீதம் குறைந்துள்ளனர்.

மேற்காசிய பகுதியில் நிலவும் பதற்றமான அரசியல் சூழ்நிலை காரணமாக, தகவல் தொழில்நுட்பம், தானியங்கி தனியார் வங்கித்துறை, தொழில்துறை ஆகியவற்றின் பங்குகளின் விலை குறைந்ததை அடுத்து, பங்குச்சந்தைகள் இறங்குமுகமாக காணப்படுகிறது.

**<<<<<<<>>>>>>>**

நாட்டின் வடக்கு மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கிழக்கு ராஜஸ்தான், மேற்கு மத்தியப்பிரதேசம், ஹிமாச்சலப்பிரதேசம், உத்ராகண்ட், குஜராத், மத்திய மஹாராஷ்ட்ரா, நாகாலாந்து, மணிப்பூர், அஸ்ஸாம் மற்றும் பீகார் மாநிலங்களில் மிக கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹரியானா, சண்டிகர், தில்லி, ஜம்மு காஷ்மீர், லடாக், கேரளா, மாஹே உள்ளிட்ட பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்குப் பருவமழை, ஹிமாச்சலப்பிரதேசம், பஞ்சாப், லடாக் உள்ளிட்ட பகுதிகளில் தீவிரமடைந்து வருவதாகவும் இந்திய வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**<<<<<<<>>>>>>>**

17 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Aditya Dileep Jadhav** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

வியட்நாமில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 48 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 3-1 என்ற புள்ளிக்கணக்கில் உஸ்பெகிஸ்தானின் **Bunyod Hasanov** –வை வென்றார்.

**<<<<<<<>>>>>>>**